# விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

## 363, பௌத்தாலோக்க மாவத்தை,

## கொழும்பு 7

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) (முன்னர் இலங்கை விஞ்ஞானம் மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CISIR) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயற்படும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, ஒப்பந்த அடிப்படையிலான ஒப்படைகள், ஆலோசனை, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப சேவைகள் மூலம் கைத்தொழில் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக செயற்படும் இலங்கையின் பல்வகை ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றாகும்.

நிறுவனத்தின், பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிறைவேற்று அதிகாரி பதவிகளுக்காக உற்சாகம் உள்ள, தேர்ச்சி மிக்க, அறிவு மற்றும் தைரியம் உள்ள முன்னணி விஞ்ஞானி ஒருவர் அல்லது பொறியியலாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிறைவேற்று அதிகாரி நிறுவனத்தின் உச்ச பதவி என்பதோடு. அவர் நிறுவன முகாமைத்துவ சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

சிறந்த உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்ட மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தயாராக உள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவர் சிறந்த பண்புடைய மற்றும் கீழ் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தகைமை மற்றும் அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1. பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிறைவேற்று அதிகாரி (HM 2 -3)

தகைமை மற்றும் அனுபவம் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2):

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞானம்/ பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பில் சித்தியுடன் நான்கு ஆண்டு காலத்தைக் கொண்ட இளமாணிப் பட்டம்.

   **மற்றும்**

   குறித்த விசேட துறை ஒன்றில் பெற்றுக்கொண்ட கலாநிதி பட்டத்தை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருபது (20) ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம். இதில் எட்டு (08) ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு ஐந்து (05) ஆண்டு கால கலாநிதி பட்டத்தின் பின் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். வெளியீடு, பேட்டன் அனுமதிப்பத்திரம், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஒப்படை உட்பட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் சிறப்பு செயற்திறன் பதிவுடன் இருத்தல் வேண்டும்.

2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் நான்கு ஆண்டுகள் கொண்ட இளமாணிப் பட்டம்.

   **மற்றும்**

   இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படும் தொழில்முறை நிறுவனம் ஒன்றில் நிறுவன அங்கத்துவத்தை (பட்டய நிலை) பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   முதல் பட்டத்தை பெற்றுக்கொண்ட பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருபது (20) ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம், இதில் எட்டு (08) ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு ஐந்து (05) ஆண்டுகள் பட்டய நிலையின் பின் அனுவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். வெளியீடு, பேட்டன் அனுமதிப்பத்திரம், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஒப்படை உட்பட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் சிறப்பு செயற்திறன் பதிவுடன் இருத்தல் வேண்டும்.

**வயது:** 40 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். குறித்த காலத்திற்கு முன்னர் பதவியில் இருந்து விலகிச் செல்லாவிட்டதால் அல்லது 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் 27(5) உறுப்புரைக்கு அமைய பதவியில் இருந்து நீக்கப்படாவிட்டால் பணிப்பாளர் நாயகம் ஐந்து ஆண்டு காலம் அல்லது தமது வயது 60 ஐ பூர்த்தி செய்யும் வரை ஆகிய இரண்டில் முதலில் வரும் திகதி வரை பதவியில் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** HM 2-3 - ரூபா 173,000 - 12 x 4,850 – 231,200/- (w.e.f. 01.01.2027)

**சம்பளம்:** ஆரம்ப சம்பளப் படி – 150,325/- + அரசு அங்கீகரித்த கொடுப்பனவு

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 1 இன் ஏற்பாட்டுக்கு அமைய: 2025.03.25 ஆம் திகதிய சுற்றுநிருப இலக்கம் 01/2025)

**வேறு நன்மைகள்**

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு அலுவலக மற்றும் தனி பயன்பாட்டுக்கு உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் வீடு மற்றும் கையடக்கத் தொலைபேசி வசதிகள் அவ்வப்போது அரசினால் விதிக்கப்படும் செலவு வரம்புக்கு உட்பட்டு வழங்கப்படும். அவர் பதவிக்கு தொடர்புடைய அனைத்து அரச கொடுப்பனவுகளுக்கு, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு உட்பட உரித்தாகும். நிறுவனத்தின் சேமலாப நிதிய முறை நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுவதோடு, அதற்காக ஊழியர்கள் மொத்த சம்பளத்தின் 10% மற்றும் நிறுவனம் 25% பங்களிப்புச் செய்யும். மேலும் சம்பளத்தில் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அவர் நிறுவனத்தினால் செயற்படுத்தும் செயல்திறன் அடிப்படையில் ஊக்கக் கொடுப்பனவு மற்றும் வேறு நன்மைகள் உரித்தாகும்.

- தற்போது அரச திணைக்களம்/ அரச கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை முன்னர் நேரடியாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களை அனுப்பும் போது ITI இணையதளத்தின் (www.iti.lk) இல் இருக்கும் படிவத்தை பயன்படுத்தும்படி விண்ணப்பதாரர்களிடம் கோரப்படுகிறது. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை கல்வி மற்றும் தொழில் தகைமை மற்றும் அனுபவம் தொடர்பில் சான்றிதழ்களின் நிழல் பிரதிகளுடன் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் 2026.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிறைவேற்று அதிகாரி பதவி'' என்று குறிப்பிடவும். இந்த தேவைக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு https://www.iti.lk/vacancies/ என்ற முகவரிக்கு பிரவேசிக்கவும்.

**தலைவர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,**
**363, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**